DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 173 /2023
**Depositions of PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | கணேசமூர்த்தி | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th Day of September 2025

**19-09-2025**
1, 2 எதிரிகள் ஆஜர்.
**முதல் விசாரணை**

நான் தற்போது திருத்தங்கல் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ஆம் ஆண்டு சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்தபோது, 10-08-2022 ஆம் தேதி மதியம் சுமார் 2.15 மணியளவில் நிலைய சார்பாய்வாளர் ராமநாதன் என்பவருடன் நானும், முதல் நிலை காவலர் சுந்தரராஜ் ஆகியோர் போலீஸ் பார்ட்டியுடன் சேர்ந்து நிலைய சரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக வெடிபொருட்கள் தயாரித்தல், பதுக்கி வைத்தல், விற்பனை செய்வது சம்மந்தமாக ரோந்து சென்றபோது, 14.45 மணிக்கு சார்பாய்வாளருக்கு கிடைத்த தகவலின்படி சிவகாசி தாலுகா, வி.சொக்கலிங்கபுரத்தில் உள்ள ரோஜாப்பூ பட்டாசு தொழிற்சாலைக்கு சென்றபோது அங்கு மரத்தடியில் அதிகமான ஆட்களை வைத்து எந்த வித பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி சட்ட விரோதமாக வெடிகளை தயாரித்துக் கொண்டிருந்தவர்கள் எங்களை பார்த்தவுடன் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பின்னர் சார்பாய்வாளர்

விசாரித்து தெரிந்த ஜமீன் சல்வார்பட்டி வடக்குத் தெருவைச் சேர்ந்த மாரியப்பன் மகன் பாஸ்கர் மற்றும் பாஸ்கர் மனைவி மனோரஞ்சிதம் ஆகியோர் மேற்படி சட்டவிரோத பட்டாசுகளை தயார் செய்யச் சொன்னது தெரியவந்தது. பின்னர் அங்கு தயாரிக்கப்பட்டிருந்த சுமார் ரூ.800 மதிப்புள்ள அசோக சட்டி வெடிகள் ஒரு பெட்டி, ரூ.600 மதிப்புள்ள சாட்டை வெடிகள் –1 பெட்டி, ரூ.700 மதிப்புள்ள கிங் ஆப் கிங் வெடிகள்– 1, சுமார் 800 மதிப்புள்ள 4 இன்ஞ் அளவுள்ள லட்சுமி வெடிகள் –1 பெட்டி ஆகியவற்றை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்ற அங்கு தனிநபர் யாரும் இல்லாததால் சார்பாய்வாளர் அவர்கள் போலீஸ் பார்ட்டியாக எங்கள் முன்னிலையில் 15 மணி முதல் 16 மணி வரை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். சார்பாய்வாளரால் தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் நானும், முதல் நிலை காவலர் சுந்தரராஜனும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அத்தாட்சி அ.சா.ஆ.–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு கைப்பற்றிய சொத்துக்களுடன் 16.45 மணிக்கு நிலையம் வந்து எதிரிகள் மீது நிலைய குற்ற எண். 337/2022 பிரிவு 9(B) (1)(a) வெடிபொருள் சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்ய சார்பாய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பாய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ரோந்து சென்றதாக கூறப்படும் நாங்கள் மூவரும் காவல் நிலையத்தில் இருந்து ஒரே வாகனத்தில் சென்றோம் என்றால் சரியல்ல. வெவ்வேறு வாகனத்தில் சென்றோம். நாங்கள் வெவ்வேறு வாகனங்களில் வெவ்வேறு

இடங்களுக்கு ரோந்து சென்றோம் என்றால் சரியல்ல, ஒரே இடத்திற்குதான் சென்றோம். சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் நாங்கள் எத்தனை இடத்திற்கு ரோந்து சென்றோம் என்றால் நேராக சம்பவம் நடந்த ரோஜாப்பூ பட்டாசு தொழிற்சாலைக்குத்தான் சென்றோம். நாங்கள் நிலையத்திலிருந்து கிளம்பும்போதே இந்த இடத்திற்குத்தான் ரோந்து செல்ல வேண்டுமென்று முடிவு செய்து சென்றோம் என்றால் சரியல்ல, ரோந்து சென்றுகொண்டிருந்த போது இடையில் சார்பாய்வாளர் எங்களை நிறுத்தி ரோஜாப்பூ பட்டாசு தொழிற்சாலைக்கு செல்வோம் என்று கூறினார். சார்பாய்வாளர் எங்களை எந்த இடத்தில் நிறுத்தி ரோஜாப்பூ பட்டாசு தொழிற்சாலைக்கு செல்வோம் என கூறினார் என்றால் வி. சொக்கலிங்காபுரத்திற்கு முன்னால் ஒரு இடத்தில் நின்று கொண்டிருந்தபோது, சார்பாய்வாளருக்கு போன் அழைப்பு வந்தது. அதன் பேரில் சார்பாய்வாளர் எங்களிடம் சொன்னார்.

(2) நாங்கள் ரோந்து சென்றதாக கூறப்படும் ரோஜாப்பூ பட்டாசு தொழிற்சாலை மாவட்ட வருவாய் அலுவலர், அல்லது சென்னை, அல்லது நாக்பூர் அலுவலகங்களில் அனுமதி பெற்ற தொழிற்சாலையா என்பது எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சார்பாய்வாளருக்குத்தான் தெரியும். நாங்கள் ரோந்து சென்றதாக சொல்லப்படும் ரோஜாப்பு பட்டாசு தொழிற்சாலையில் எத்தனை அறைகள் இருந்தன என்றால் அறைகளை எண்ணவில்லை. நாங்கள் ரோந்து சென்றபோது அந்த தொழிற்சாலையில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 15 நபர்கள் இருந்தார்கள். அந்த தொழிற்சாலைக்கு எத்தனை நுழைவு வாயில்கள் உள்ளன என்றால் நாங்கள் பிரதான

நுழைவாயிலில் சென்றோம். மற்ற நுழைவாயிலை பார்க்கவில்லை. நாங்கள் உண்மையில் ரோஜாப்பூ பட்டாசு தொழிற்சாலைக்கு ரோந்து சென்றிருந்தால் அங்கு எத்தனை அறைகள் உள்ளன, எத்தனை நுழைவாயில்கள் உள்ளன என்ற விவரம் எனக்குத் தெரிந்திருக்கும் என்றாலும் எனது உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதாலேயே அத்தாட்சியில் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. கைப்பற்றியதாக கூறப்படும் அசோக சட்டி வெடி பெட்டியில் எத்தனை அசோக சட்டி வெடிகள், லெட்சுமி வெடிகள் ஆகியனவும், சாட்டை மற்றும் குண்டு வெடி பெட்டிகளில் எத்தனை சாட்டை குண்டு வெடிகள் இருந்தன என்று தெரியுமா என்றால் அது பற்றி சார்பாய்வாளருக்குத்தான் தெரியும்.

(3) நாங்கள் ரோந்து சென்றதாக கூறும் சமயம் மேற்படி வெடிகள் அட்டைபெட்டிகளில் இருந்ததா என்றால் இல்லை. நாங்கள்தான் அட்டை பெட்டிகளில் எடுத்து வைத்தோம். நாங்கள் உண்மையில் ரோந்து பணி சென்றிருந்தால் எங்களால் அட்டை பெட்டிகளில் வெடிகள் எடுத்துவைக்கப்பட்டதாக கூறும்போதும், ஒவ்வொரு அட்டை பெட்டியிலும் எத்தனை வெடிகள் வைக்கப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. நாங்கள் ரோந்து சென்றதாக கூறப்படும் இடத்திற்கு ஒரே ஒரு நுழைவு வாயில் மட்டும்தான் உள்ளது என்றாலும், உண்மையில் நாங்கள் ரோந்து சென்றிருந்தால் அங்கு வேலை பார்த்ததாக கூறப்படும் பணியாளர்களில் யாராவது ஒருவர் சாட்சியாக இருந்திருப்பார் என்றால் சரியல்ல. நாங்கள் ரோந்து சென்றதாக கூறப்படும் பட்டாசு தொழிற்சாலையை சுற்றி முள்கம்பி வேலி போடப்பட்டிருந்தது

என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னதுபோல் உண்மையில் நாங்கள் சொன்ன நாள், நேரம் , இடத்திற்கு ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் எங்கள் முன்னிலையில் எந்த வித பட்டாசும் சொன்ன இடத்தில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், எங்கள் உயரதிகாரி கேட்டுக்கொண்டதன் பேரில் அத்தாட்சியில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.